தான் நடந்து வருகின்றன. "காண்டிராக்ட்" டில் விட்டால் இப்படித் தான் வரும். ஆகையால், இன்றைக்கு சர்க்காருடைய கொள்கை என்ன வென்றால் அந்தந்த ஊரில் இருக்கக்கூடியவர்களே ஒன்றுசேர்ந்து இந்தத் திட்டத்தை நடத்தவேண்டும் என்பது. உண்மையாகவே சொல்லுகிறேன். பெருமையாகக்கூடச் சொல்லிக்கொள்ளுகிறேன். பல ஊர்களில் இன் றைக்கு நம்முடைய தாய்மார்கள் தாங்களே உணவைப் சமைத்து, பள்ளி களில் படிக்கும் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு சுவை மிக்க உணவு அளித்து வருகிறார்கள். தாய்மார்களில் வீட்டுக்கு ஒருவராகப் போட்டி போட்டுக்கொண்டு, ஒவ்வொரு நாளும் சமைத்துப் போடுவதையும் பார்த் திருக்கிறேன். அப்போது உண்மையில் அந்தச் சாப்பாடு சுவைக்கும். கண்டிராக்டர்கள் எப்படிச் சமைத்துப் போட்டாலும் அது ஜெயில் சாப் பாடாகத்தான் இருக்கும். தாய்மார்களுடைய புனித கரம்பட்ட சாப்பாடு என்றால் அதற்கு நிச்சயமாகத் தனிச் சுவை உண்டு. ஆகையால் இந்த மாதிரி ஏழை மாணவர்களுக்கு பிற்பகல் உணவைத் தாங்களே சமைத்துப் போடும் பெரும் தொண்டைச் செய்ய தாய்மார்கள் மேலும் மேலும் முன் வரவேண்டும், அதற்கு வேண்டிய ஊக்கத்தை இங்குள்ள பெண் அங்கத் தினர்கள் எல்லாம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri M. JAGANNATHAN : லேடி காண்டிராக்டர்களிடம் விடலாம்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கண்டிராக்டர்கள் என்றால் ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் எப்படிச் சுருக்கி லாபம் அடையலாம் என்பதிலேயே கவனம் உடையவர்களாக இருப்பார்கள். அன்பு உள்ளத்தோடு தாய்மார்கள் தாங்களாகவே சேவா மனப்பான்மை யுடன் இந்த உணவைச் சமைத்துப் படைக்க வந்தால் தான் அது சுவைமிக்க உணவாக இருக்குமென்று சொன்னேன். இந்தத் திட்டம் நல்ல முறையில் நடக்கும். ஆகவே இந்த முறையை அமைக்க வேண்டுமென்பதற்காக ஊரில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் அக்கறை எடுத்துக்கொண்டு பணிபுரிய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். பொதுவாக ஒரு ஊரில் உள்ள பள்ளிக்கூடம் நன்றாக நடக்க வேண்டுமென்றால், அந்தப் பள்ளிக்கூடத்தின் தரம் உயரவேண்டுமென்றால் ஊரில் உள்ளவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டால் தான் முடியும். அக்கறை எடுத்துக் கொள்வது என்றால் அன்றாடம் பள்ளி நிர்வாகத்தில் சென்று தாங்களும் தலையிட்டு கலந்துகொள்ளவேண்டும் என்று சொல்லவில்லை. அடிக்கடி அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவியை எல்லாம் இவர்கள் அளிக்க முன்வந்தால், அந்தப் பள்ளிக்கூடம் நன்றாக நடப்பதற்கு எவ்வளவு உதவி வேண்டுமோ அவ்வளவையும் செய்வார் களேயானால் அந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடம் நிச்சயமாக முன்னேற்றம் அடையும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஓராசியர்களுக்கு பயிற்சி வேண்டும், அவர்களும் இரண்டாண்டு பயிற்சி பெற்று வரவேண்டும் என்பதைப் பற்றிக்குறை கூறப்பட்டது. அவர்களுக்கு பயிற்சியே தேவை இல்லை, இருந்தாலும் குறைந்தகால பயிற்சகி அளித்தால் போதும் என்பதாகவும் சொல்லப்பட்டது. இன்று நாம் இந்த பிரச்சனைக்கு முடிவு காண வேண்டும் என்று முயற்சிக்கும் போது ஒரு விஷயத்தை கவனத்தில் கண்டிப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல நல்ல ஆசிரியர்களாக அவர்கள் பணியாற்ற வேண்டுமென்றால் அதற்குச் சிறந்த வழி என்ன என்பதை ஆலோசிக்க வேண்டும். இன்றைக்கு ஏதோ ஓராசிரியப் பள்ளியில் வேலை செய்பவர்களுக்கு பயிற்சியே வேண்டாம் என்பதாக நாம் முடிவு செய்துவிடலாம். ஆனால் அவர்கள் வருங்காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி போதிக்க வேண்டியவர்கள். அவர்களிடம் படிக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் நலனை பொறுத்தும் எது நல்லது என்று முடிவு செய்ய வேண்டிய பொறுப்புடைய வர்கள் நாம். ஏதோ ஒரு சில பேர்களுடைய சொந்தக் கஷ்டத்தை மனதில் வைத்துக் கொண்டு நாம் இவ்விஷயத்தில் முடிவு செய்துவிட முடியாது. நம்முடைய குழந்தைகளுக்கு நல்ல கல்வியை போதிக்கக் கூடிய திறமை உடையவர்களாக அவர்கள் ஆகவேண்டுமானால் அவர்களுக்கு இரண்டு வருஷப் பயிற்சி வேண்டும் என்று நாம் முடிவு செய்து இதர ஆசிரியர்